**ஹங்குரன்கெத பிரதேச சபை – 2020**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

ஹங்குரன்கெத பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஹங்குரன்கெத பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாகவும்.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் 1.6.1(அ) பந்தியின் அவதானிப்பு தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அறிக்கையில் சுட்டிக்காண்பித்த 1.2.1 (அ), (உ), (ஊ) ஆகிய கணக்கீட்டுக் குறைபாடுகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வேறுபாடுகள் இனங் காணப்பட்டு சீராக்கங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டில் நிறைவேற்றப்படாத ரூபா. 1,200,000 ஆன 24 செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதாக கருத்தி சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்ட காரணத்தினால் கைத்தொழில் கடன்கொடுத்தோர் மற்றும் திரட்டிய நிதி அப்பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்வதாக குறிப்பிடப்பட்டிருந்தது | இத்தவறுகளை இனங்கண்டு கணக்குகளில் தேவையான சீராக்கம் செய்ய வேண்டும். |

**1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட 06 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 9,762,054 தொகையான அதற்குரிய அட்டவணைகளில் காண்பிக்கப்பட்ட மீதிகளுக்கு இடையே 569,709 ஆன வேறுபாடு ஒன்று இருந்தது | அட்டவணையில் உள்ள தவறுகள் மற்றும் மீதகளை தேட முடியாதெனவும் அடுத்து வரும் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | இணக்கமின்மை இனங்காணப்பட்டு சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**1.6.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ரூபா 2,842,059 கூட்டுமொத்தமான 7 கணக்கு மீதிகளுக்குரிய கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | அடுத்த ஆண்டின் கணக்கு கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | அட்டவணைகள் முறையாக பேணப்பட வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,972,042 ஆக இருந்ததுடன் அதனோடு ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,517,554 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| 2020 சனவரி 01 இல உள்ளவாறு ரூபா 1,667,956 ஆன நிலுவை வீதவரி காணப்பட்டதுடன் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடுகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 563,028 ஆக இருந்தமையால் வருமான சேகரிப்பின் செயலாற்றல் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது. | எதிர்காலத்தில் அறவிடுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | பிரதேச சபை சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(ஆ) வாடகை**

---------------

| | | |
|---|---|---|
| ஹங்குரன்கெத பொது சந்தைக் கட்டடத் தொகுதியில் 12 கடைகளிலிருந்து 4 வருடங்கள் முதல் 9 வருடங்கள் வரை காணப்படுகின்ற ரூபா. 2,214,537 நிலுவை கடை வாடகை அறவிடப்பட்டிருக்க வில்லை. உரித்தினை கையேற்பதற்கு கோவைகள் தயாரித்தல் மாத்திரம் இடம் பெற்றிருந்தது. | சட்டரீதியாக உரித்தினை கையேற்பதற்கு வழக்கு தொடருவதற்காக கோவைகளை தயாரித்து உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் அவுலகத்திற்கு 2020 பெப்ரவர 05 ஆந் திகதி கையளிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(இ) நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

------------------------------------------------

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி பெற வேண்டிய ரூபா 87,289 ஆன நீதிமன்றத் தண்டப் பணத்தையும் ரூபா 15,733,922 ஆன முத்திரைக் கட்டணங்களையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பினை ஏற்றுக் கொள்வதாக. | நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------------

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

---------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஜோன்ஸ்லேன்ட் வீதியின் புனரமைப்பு நடவடிக்கை களுக்காக 2018 ஆம் ஆண்டின் போது வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 800,000 வைப்புத் தொகை உரிய செயற்பாடுகளை மேற்கொள்ளாமல் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | மதிப்பீட்டின் பிரகாரம் புனரமைப்பு வேலைகளை செய்வதற்கு இப்பணம் போதியளவில் இல்லாமையால் பணம் கிடைத்ததன் பின்னர் புனரமைப்பு வேலைகளுக்கு பயன்படுத்தப்பட உள்ளது. | நிதிஏறபாடுகளை உயர்அளவில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டில் சபை அதிகார பிரதேசத்தில் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக 85 விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததுடன் அதில் 45 இற்காக மாத்திரம் கட்டிட அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தது. கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் அங்கீகாரத்தை வழங்குவதற்கு 1 மாதம் முதல் 6 மாதங்கள் வரையான தாமதமொன்றும் சுகாதார வைத்திய உத்தியோத்தியோகத்தர் அலுவலகத்தின் மேற்பார்வை அறிக்கை 1 மாதம் முதல் 11 மாத காலம் தாமதடைந்தமையால் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு தாமதம் காணப்பட்டது. | கட்டிட விண்ணப்ப படிவங்களில் குறைபாடுகளை பூர்த்தி செய்யாமையால் இவ்வாறு ஏற்பட்டுள்ளது. | செயற்பாடுகளை செயளற்திறனாக மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய நிர்மாணக் கடன்பட்டோர் மீதி ரூபா 3,463,177 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 408,733 தொகை ஓராண்டிற்கு மேற்பட்ட காலத்தை விஞ்சி அறவிட வேண்டியிருந்தது.. | தேவையான தகவல்கள் மற்றம் பணத்தை பெற்றுக்கொள்வதற்குரிய நிறுவனங்களிடமிருந்து எழுத்துமூல மற்றும் வாய்மொழி மூலம் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை சபைக்கு கிடைத்திருக்க வில்லை. | கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய நிர்மாணக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 10,580,098 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 2,240,984 தொகை 2013 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான காலமாக இருந்து வரும் மீதியொன்றாக இருந்த போதும் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விரைவில் தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 சுற்றாடல் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வதகம அஸ்பன்னிய திண்மக்கழிவுப் பொருள் நிலையத்திலுள்ள கட்டிடம் விளைவற்று காணப்பட்டது. | தற்போது சேதனப் பசளை வழங்குவதற்காக இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்கு தயார்படுத்தப்பட்டுள்ளது. | சொத்துக்களை செயற்திறனாக பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |